★ தெல்லிப்பழை பல நோ. கூட்டுறவுச் சங்கம் துரித நடவடிக்கை

## அகதிகள் தஞ்சமடைந்த இடங்களில் கிளைகள்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் எல்லைப்பரப்பிலிருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களின் நலன் கருதி அவர்கள் தஞ்சமடைந்துள்ள பகுதிகளில் தமது கிளைகளை திறந்து உணவுப்பொருள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி முதலில் நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தஞ்சமடைந்தவர்களுக்காக ஒரு கிளை நிலையத்தை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தெல்லிப்பழை பல நோ. கூ. சங்க கிளைகளில் சில தற்போதைய நிலைமைகளால் இயங்க முடியாதிருப்பதாலும் அதிகமான நுகர்வோரும் இடம்பெயர்ந்துள்ளமையாலும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா நல்லூர் பல நோ. கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். (66 ரு)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 250 ஞாயிறு 21-10-1990 (ஐப்பசி 04) ற. ஆகிர் 01

# பலாலியிலிருந்து இராணுவம் காங்கேசனுக்கு வர முயற்சி

## மாவிட்டபுரம் பகுதியில் மாலை வரை தொடர்ந்து யுத்தம்

**பலாலியிலிருந்து காங்கேசன்துறைப் பகுதியை நோக்கி வர முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடுமையான யுத்தம் இடம்பெற்றது.**

பலாலி முகாமிலிருந்து கட்டுவன் ஊடாக வீமன்காமம் பளைப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மாவிட்டபுரம் - பலாலி வீதியில் உள்ள சாந்தை சந்தி என்ற இடத்தில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இராணுவத்தினர் நடாத்தும் ஷெல் தாக்குதல்களால் ஷெல் குண்டுகள் மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் விழுந்து வெடித்தன. (48-ரு)

## கட்டுவனில் கடும் மோதல் இரு டாங்கிகள் சேதம்

நேற்றுக்காலை கட்டுவன் சந்தியில் புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றது.

காலை ஏழரை மணியளவில் பல வாகனங்கள் சகிதம் கட்டுவன் சந்திக்கு வந்த ராணுவத்தினருடன் புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர். இத்தாக்குதலின் போது ராணுவத்தினரின் இரு கனரக டாங்கிகள் சேதமடைந்தன.

இப்பகுதியில் நடைபெற்ற மோதலில் ராணுவ தரப்பில் சேதம் அதிகமாக ஏற்பட்டுள்ளபோதிலும் விபரங்கள் அறியமுடியவல்லை. புலிகள் தரப்பில் பெண் புலி ஆர்த்தி (ஆரயம்பதி) வீரமரணமடைந்தார்.

மோதல்கள் மாலைவரை தொடர்ந்து நடைபெற்றது (து)

## மல்லாகத்தில் குண்டு வீச்சு ஒருவர் காலை இழந்தார்

மல்லாகம் சந்தியில் நேற்றுக்காலை 6 மணியளவில் அவ்ரோ விமானத்தில் இருந்து வீசப்பட்ட பீப்பாய் குண்டு வெடித்ததால் 5 கடைகள் சேதமடைந்தன.

இதனால் ஒருதேனீர்க்கடை உரிமையாளர் த. ஜெயகாந்தன் (15) தனது வலது காலை இழந்தார்.

இக் கடையில் இருந்த செ. டிலான் (12) செ. செரோம் (16) மு. கருணாநிதி (23) சுப்பிரமணியம் (38) ந, பாக்கியம் (42) ஆகியோரும் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர். (ப 11 48 ரு)

## பலாலியில் இராணுவ சடலங்கள் உடனுக்குடன் எரிக்கப்படுகின்றன

பலாலி முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்குப் பலியானால் அவர்களின் உடல்கள் அந்த இடத்திலேயே சகசிப்பாய்களினால் எரிக்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல்களில் காயமடையும் சிப்பாய்களின் தொகை நூற்றுக்கணக்கில் தற்போது அதிகரித்து வருகின்றது. இவர்கள் உடனுக்குடன் அகற்றப்படுவதால் விமானங்களில்

—04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் வெளியேற முயற்சி புலிகளின் தாக்குதலால் முறியடிப்பு

நேற்று முன்தினம் முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற இராணுவம் எடுத்த முயற்சியை விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு தடுத்து நிறுத்தினர்.

காலை பதினொரு மணியளவில் முகாமில் இருந்து இராணுவம் வெளியேற முற்பட்டதைத் தொடர்ந்து புலிகள் முகாம் நோக்கிப் பலத்த தாக்குதலைத் தொடுத்தனர். இதனையடுத்து இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர். (து)

## கடற்படை பகுதியில் இருந்து அதிகாலை தாக்குதல்கள்

நேற்று அதிகாலை 5 மணியளவில் கீரிமலை, காங்கேசன்துறை கடற்பகுதியில் இருந்து கடற்படைப் படகு பலத்த பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டது.

கருகம்பானை, கொல்லங்கலட்டி, விழிசிட்டி, பன்னாலை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன,

இதனால் கீரிமலையில் மு தம்பித்துரை, சி. சூரியகுமார் ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன. (48-ரு)

## தமிழ் அகதிகள் விபரம் கொழும்பில் சேகரிக்கத் திட்டம்

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பு சென்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்ற பெயரில் அவர்களின் விபரங்களை அரசு சேகரித்துவருகிறது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பெயர் விபரங்களின் மூலம் கொழும்பிலும் வடக்குக் கிழக்கு தமிழ் அகதிகள் என்று வெளிநாடுகளில் நிதி மற்றும் உதவிகளைப்பெறஅரசு திட்டமிட்டுள்ளது. (66-ரு)

## 24 புலிகள் வீரமரணம்

பலாலிப்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற மோதலில் இதுவரை 24 விடுதலைப்புலிப்போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

விச்ரர் (புத்தளம்), ஷெல்டன் (நாவாந்துறை), ஐயன் (புத்தூர்), ராசீக் (பருத்தித்துறை), கிசோபன் (இருபாலை), நெல்சன் (பூநகரி), ரஹீம் (சாவகச்சேரி), கந்தையா (அளவெட்டி), தமிழ்செல்வன் (மன்னார்), நசார். ரகு (அளவெட்டி), மரியதாஸ் (வல்வெட்டித்துறை), அனுஷன் (தெல்லிப்பழை), சீனன் (நீர்வேலி), செல்வம் (பருத்தித்துறை), சுகந்தன் (முல்

—04ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் தாக்குதல் மேலும் ஒருவர் மரணம்

நேற்று முன்தினம் தெல்லிப்பழையில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் படுகாயம் அடைந்த வல்லிபுரம் செல்லம்மா (68) நேற்றுமுன்தினம் இரவு மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இச்சம்பவத்தில் ஸ்தலத்தில் ஆறுபேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ப-11 ரு)

### வலிகாமம் பகுதியில் இருந்து

## இடம்பெயர்ந்தவர்கள் தமது நிவாரண உணவு பெற ஏற்பாடு

வலிகாமம் வடக்குப் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு தற்போது வழங்கப்படும் இலவச நிவாரண உணவு விநியோகம் தஞ்சமடைந்துள்ள இடங்களிலேயே பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே அதிகமாக இந்த அகதிகள் தங்கியுள்ளனர்.

இப்பகுதி கிராமசேவகர்கள் தற்போது இந்த அகதிகளின் விபரங்களை திரட்டிவருகின்றனர்.

திரட்டப்படும் விபரங்கள், எப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தார்களோ அந்தந்தப்பகுதி உதவி அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களின் சிபாரசு பெறப்படும். அதன் பின்னர் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உணவு விநியோகத்திற்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டு உணவு விநியோகம் இடம்பெறும். (66-ரு)

### நல்லூரில் உத்தரவு பெற்ற வியாபாரி

## இலவச உணவுப்பொருட்களுக்கு சிட்டை வழங்குவதில்லை

நல்லூர் விநாயகர் வீதியில் உள்ள உத்தரவு பெற்ற வியாபாரி தனது கடையில் இலவச உணவுப் பொருட்களை வாங்க வருபவர்களில் ஒரு சிலருக்கு 22 ஆம் திகதிக்குப் பின்பு வருமாறு கூறுகின்றார். கிராமசேவையாளர் வழங்கிய பெர்மிட்டில் குறிப்பிட்ட தொகையிலும் குறைந்தளவு பொருட்களையே இந்த வியாபாரி விநியோகிக்கிறார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

கந்த சஷ்டி சிந்தனை - 3

## ஓம் எனும் மந்திர ரூபம்-மயில் ஓங்கி விரிக்கும் கலாபம்!

'ஓம்' என்பது ஒப்பில்லாத வேத மந்திரம். பிறவிப் பெருங்கடலைத் தாண்டச் செய்வது ஆதலின் அதைத் தாரக மந்திரம் என்பர். (தாரகம் – தாண்டச் செய்வது)

''கர்ப்ப ஜன்ம ஜராமரண சம்சார மஹத் பயாத்
ஸந்தாரயதி தஸ்மாத் தாரகம்''

— தாரக உபநிஷத்

ஓங்காரத்தைப் பிரணவம் என்றும் சொல்வர். தன்னை ஓதுபவர்க்குப் புதிய ஆற்றலைக் கொடுப்பது என்பது இதற்குப் பொருள்.

இந்த மந்திரத்தின் பொருள் தெரியாது விழித்த நான்முகனை முருகன் குட்டிச் சிறையிலிட்டான்:-

''உகந்த பிரணவத்தின் உண்மை புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே!''

— கந்தர் கலிவெண்பா.

பிறகு, சிவனார் மனங்குளிர மெய்ப்பொருளை அவருக்கு உபதேசித்தான். தந்தைக்குக் குருவாக வந்தபடியால் முருகனுக்குத் 'தகப்பன்சாமி' என்றும் ஒரு பெயர்.

சரி, பிரமன் காணாத —முருகப் பெருமான் தந்தைக்கே உபதேசித்த — பொருள் எது?

'நாதா குமரா நம'என்(று), அரனார்
'ஓதாய்' என ஓதிய(து) எப்பொருள்?

— கந்தர் அநுபூதி

இதற்கு விடைகாண அருணகிரியாரே உதவ வேண்டும். 'யான்', 'தான்' என்ற துவிதம் அற்ற நிலையிலேயே உண்மை அறிவு (=சத்தியம்) தோன்றும்.

''யான் தான் எனுஞ்சொல் இரண்டுங் கெட்டாலன்றியாவருக்கும்
தோன்றாது சத்தியம்!''

— கந்தரலங்காரம்

இந்த உண்மையை அறிவதுதான் ஓங்காரத்தின் பொருள்:

''அறிவை அறிவது பொருள் என அருளிய பெருமாளே!''

— திருப்புகழ்

அருணகிரிநாதர் அருமை பெருமைகளைத் தாயுமானார் உணர்ந்தது போல் யாரும் உணரவில்லை.

''அறிவை அறிவதுவே ஆகும் பொருளென்று
உறுதி சொன்ன உண்மையினை ஒரும்நாள் எந்நாளோ!''

என ஏங்குகிறார் அவர்.

கல்லிலும் செம்பிலும் மட்டும் கடவுளைக் காணாமல், ஓங்காரத்தின் உள்ளொளிக்குள் அவன் உருவைக் கண்டு தொழ வேண்டும்.

முருகன் திருக்கோலத்தைப் பார்க்கும் அருணகிரியாருக்கு அந்தக் காட்சியே தெரிகிறது. தோகை விரித்தாடும் மயிலை 'ஓம்' என்ற மந்திர வடிவாகவே காண்கிறார் அவர்.

''ஆனதனிமந்ர ரூபநிலை கொண்ட(து)
ஆடுமயில் என்ப (து) அறியேனே!''

பிரஜைகள் குழு ஸ்ரீ. ல. செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கடிதம்

## யாழ் போதனா வைத்தியசாலை இயங்க உதவுக

''ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு பராமரிப்பும் சேவையும் மறுக்கப்படும் அதேவேளையில், கணிசமான தொகையினர், வசதிகள் அறவே போதாத மானிப்பாய் மருத்துவமனையில் திணிக்கப்பட்டுள்ளார்கள்.

விசேட தகைமை படைத்த மருத்துவர்கள் விரக்தியடைந்து வெளியேறுகிறார்கள். வைத்திய மாணவர்கள் கொழும்புக்கு மாற்றம் பெற்றுச்செல்கிறார்கள்.

''மொத்தத்தில்யாழ் மருத்துவமனையின்வரலாற்றிலேயே கேள்விப்பட்டிராத இயலாமை உணர்வு மேலோங்கியுள்ளது''

இவ்வாறு யாழ் பிரஜைகள் குழு ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

குழு, கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் யாழ் போதனா வைத்தியசாலை மீண்டும் திறக்கப்படும் என்று முன்னர் சொல்லப்பட்டது. கடந்த 26-09-90 இல் பாதுகாப்பு இணை அமைச்சர் 'ஒரு சில நாள்களில் மருத்துவமனை திறக்கப்படும்' என அறிவித்தார். ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கடந்த காலங்களில், உயிராபத்தைக்கூடப் பொருட்படுத்தாது மருத்துவர்களும் மற்றும் ஊழியர்களும் மக்களுக்குச் சேவை செய்திருக்கிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, கடமையில் ஈடுபட்டிருந்தபொழுது 21 ஊழியர்கள் உயிரிழந்த போதும், சிறிதும் தளராது, சிலமணி நேரத்தில், ஏனையோர் சேவையைத் தொடர்ந்ததை இன்றும் மக்கள் நன்றியோடு நினைக்கின்றனர்.

''செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவால் உதவ முடியாத நிலையில், உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, போதனா வைத்தியசாலையின் ஒரு பகுதியையாவது இயங்கச் செய்யுமாறு உங்களை வேண்டுகிறோம்.

''வெளிநாட்டவர்களைவிட, யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகளை உங்களால் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு'' என்று கடிதத்தை முடித்திருக்கிறது பிரஜைகள் குழு.

வடபகுதித் தேவைக்கென

# மூன்று 'வை 12' விமானங்கள்

# சீனாவிடம் புதிதாகக் கொள்வனவு

இலங்கை விமானப்படை புதிதாக மூன்று வை-12 சீனக் சரக்கு விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

இந்த விமானங்கள் நான்கு என்ஜின்களைக் கொண்டவை. இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்த விமானங்களில் சில மாற்றங்கள் இரத்மலானை விமானப்படைத் தளத்தில் வைத்து செய்யப்பட்ட பின்னர் அவை வடபகுதியில் பயன்படுத்தவென அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விமானப்படைத் தளபதி ஏயர் மார்சல் ரெரன்ஸ் குணவர்த்தனா கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சீன விமானங்கள் மிகவும் மலிவான விலையில் கொள்வனவு செய்யப்பட்டன. அண்மையில் கோட்டை முற்றுகை முறியடிப்பு முயற்சியின்போது ஏற்கனவே விமானப்படையிடமிருந்த 'வை-12' விமானங்கள் நல்ல 'சேவையை' செய்ததாகவும் இப்பேட்டியில் ரெரன்ஸ் குணவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

இலங்கை விமானப்படையில் தற்பொழுது பத்தாயிரம் படையினரும் நானூறு அதிகாரிகளும் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக ஹெலிகொப்டர் வாங்கும் எண்ணம் இருக்கிறதா என வினாவப்பட்டபோது தம்மிடம் போதியளவு ஹெலிகொப்டர்கள் இருப்பதாகவும் ஆனால் தாக்குதிறன்கூடியகியூகோ கோபிரா, மங்குஸ்ரர் போன்ற ஹெலிகொப்டர்கள் தம்மிடம் இல்லை என்றும் அவர் பதிலளித்தார்.


மிக் விமானங்களை வாங்கும் எண்ணம் தற்போது விமானப்படைக்கு இல்லை எனவும் விமானப்படைத் தளபதி இப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (கி)

## ஆறாம் ஆண்டு புலமைப்பரிசில் அதிகளவில் இம்முறைவழங்கப்படும்

ஆறாம் ஆண்டில் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கிப் பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்குவதற்காக ஆறாம் ஆண்டுக்கான இடவசதி மற்றும் வசதிகளைக் கொண்ட விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கல்விஅமைச்சு சகல பிரபல பாடசாலைகளுக்கும் பணிப்புரை வழங்கியிருக்கின்றது.

இவ்வாண்டுமுதல் ஐந்தாம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் இருந்து அதிகமான அளவில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பெற்றோரின் விருப்பிற் சேற்ப பாடசாலையினை வழங்கும் திட்டத்தினைக் கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32கி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரவீந்திரன் சாந்தினி

மண்ணில்: 23 - 09 - 1967 விண்ணில்: 01 - 11 - 1989

திதி: 21-10-1990

அன்பே! சாந்தி நீரின்றி இங்கே
அனலாய்த் துடிக்கின்றோம்
கண்ணீரும் வற்றிச் செந்நீரும் வற்ற
கதறி அழுகின்றோம் - காணவில்லையம்மா
காசினியில் - இனி எப்ப அம்மா - நீ
காட்சி தர வந்துதிப்பாய் சாந்தி

பிரிவால் வாடும்

கணவன், பிள்ளைகள்: இ.பிரிசாந், இ.பிரியங்கா,
பப்பா, அம்மா, சகோதரர்கள்,
அத்தான், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்.

''சிதம்பர நிலையம்''
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

10098

## மன்னாரில் மலிவு விற்பனை

மன்னாரில் இருந்து இந்தியாவுக்குச் செல்வோர் தமது வீடுகளில் உள்ள சிறு, சிறு பொருட்களைக்கூட விற்று வருகின்றனர்.

மன்னாரில் இருந்து இந்தியாவிற்கு அகதிகளாகச் செல்லும்போது தமது வீடுகளில் இருந்த சிமெந்துக் கற்களைக் கூட இவர்கள் விற்றுவிட்டுச் சென்றுள்ளார்கள்.

பணமின்மையால் ஒரு கல்லு இரண்டு ரூபா ஐம்பது சதத்திற்கு இந்தியா செல்வோரினால்விற்கப்பட்டுவருகின்றது.

சைக்கிள் ஒன்று 300 ரூபா விற்கும், ஒரு பவுண் 700 ரூபாவிற்கும் இப்பகுதியில் விற்கப்பட்டதாக மேலும் தெரியவருகிறது. (17-கி)


## சிறுவிளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரட்பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும் (காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை), பாஸ்போட், அடையாள அட்டை, புகைப்படங்கள் (கறுப்பு வெள்ளைப்படங்கள் மட்டும்) பிடிக்கவும், படங்களை 12'' × 10'' அளவுக்கு பெரிதாக்கவும் (மாலை 2.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை) நாட வேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல.351, கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர். 10066

### சேவை

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவரிட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம், (இந்துமகளிர் கல்லூரிச் சந்திக்கு அருகாமையில்) வேலைநேரம்: காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. 10084

### அடுத்த ஆண்டு முதல் புதிய பாடத்திட்டம் அறிமுகம்

# 9-ம் வகுப்பில் சகல மாணவர்களும்

## கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பெறல் வேண்டும்

அடுத்த வருடம் முதல் புதிய கல்வித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி சகல 9-ம் வகுப்பு மாணவர்களும் கனிஷ்ட தொழில் நுட்பப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

கனிஷ்ட தொழில் நுட்ப தராதரம் பெற்றவர்களே இத்திட்டத்தின்படி இனிமேல் 10-ம் வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி,

# மாவீரர் நாள்

## பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு

கார்த்திகை மாதம் 27-ம் திகதி தமிழீழ மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுமென விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

முதல் களப்பலியான வேங்கை சத்தியநாதன் (சங்கர்) வீரமரணமடைந்த அந்த நாளை மாவீரர் நாளாகக் குறிப்பிட்டு எமது தமிழீழத்தின் தேசிய தினமாகவும் பிரகடனப் படுத்தியுள்ளோம். ஒரு சுயாதீன நாட்டுக்கு தேசியக்கொடி, தேசிய கீதம், தேசியதினம் என்ற முக்கியமான மூன்று மகிமையான அம்சங்கள் உண்டு. அந்த ரீதியில் தமிழீழத்தின் தேசிய தினமாக இந்த மாவீரர் நாள் அமைவதாக விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

### மாவீரர் வாரம்

மாவீரர் வாரம் கார்த்திகை மாதம் 21-ம் திகதி ஆரம்பமாகி 27-ம் திகதி நிறைவு பெறும். இந்த ஒரு வாரமும் மாவீரர்களை நினைவு கொள்ளவும், இழந்து போன எமது இறைமைக்கான போராட்டத்தை வெற்றி கொள்ளவும் கூடிய கருத்துக்களை முன் வைக்கக் கூடிய நிகழ்ச்சிகளை தமிழீழமெங்கும் நடாத்த வேண்டும். இத்தினங்கள் களியாட்டத்துக்குரியனவோ அல்லது சோகம் ததும்பிய தினங்களோ அல்ல.

### மாவீரர் போட்டிகள்

மாவீரர் நாளையொட்டி மக்கள் முன்னணி பத்திரிகைகள் மூலம் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், நாவல் போட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்போட்டிகளில் பெருமளவில் மாணவர்களும், படைப்பாளிகளும் பங்கேற்க வேண்டும்.

### தேசியக்கொடி ஏற்றும் வைபவம்

மாவீரர் தினத்தையொட்டிய தேசியக் கொடியேற்றும் வைபவம் 21-ம் திகதி காலை 9 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச்செயலகம், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், புலிகளின் முகாம்கள், பாசறைகள், துணைச் செயலகங்கள், பாடசாலைகள், சன சமூக நிலையங்கள், தொழிற்சாலைகள், சமூக அபிவிருத்தி நிலையங்கள், மாதர்நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் கேந்திர நிலையங்களில் பொறுப்பு வாய்ந்த தகைமையாளர்களால் ஏற்றி வைக்கப்பட்டு மாவீரர்தினம் ஆரம்பமாகும்.

### மாவீரர் நிகழ்ச்சிகள்

மாவீரர் வாரமாக 7 நாட்களும் நினைவுக் கூட்டங்களும், பட்டிமன்றங்களும், கவியரங்குகளும், கலை நிகழ்வுகளும், மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்தல், மரம்நாட்டுதல், சமூகசேவை செய்தல், வீதிகளுக்கு மாவீரர் பெயர் சூட்டுதல் போன்றவையும் இடம்பெறும்.

### அலங்காரம்

இந்த ஒரு வாரமும்தமிழீழப் பகுதிகள் எங்கும் மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### மாவீரர்சுடர் ஏற்றலும் நினைவொலி எழுப்பலும்

26-ம்திகதி நள்ளிரவு 12,01 மணிக்கு சகல ஆலயங்கள் தேவாலயங்கள், நிறுவனங்கள் யாவற்றிலும் பாரிய மணிகளை அசைப்பதன் மூலம் ஒரே சீராக மாவீரர் நினைவு ஒலி எழுப்பப்பட வேண்டும் மணிஒலி 2 நிமிடங்கள் நீடிக்கும். இந்த இரண்டு நிமிடத்திலும் மறைந்த மாவீரர்களுக்காக எழுந்து சகலரும் மௌன அஞ்சலி செலுத்த வேண்டும். நினைவு ஒலி முடிந்ததும் மாவீரர் சுடர் ஏற்றுவது ஆரம்பமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை மாவீரர்கள் இறந்தார்களோ அந்தந்த மாவட்டத்தில் அத்தனை தீப்பந்தங்கள் சுற்றி வட்டமாக சமச்சீராக நாட்டப்பட்டு அழைத்து வரப்பட்டிருக்கும் மாவீரர்களின் பெற்றோர்களினாலும் குடும்ப அங்கத்தவர்களாலும்கொளுத்தப்படும்.

### மாவீரர் நினைவாக சமூக சேவைகள்

மாவீரர் நினைவாக அகதி முகாம்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் குடியிருப்புக்கள், வீதிகள் குளங்கள் போன்ற இடங்களில் சிற்றூரவைகள், சன சமூக நிலையங்கள் போன்றவற்றின் கண்காணிப்பில் சிரமதானங்கள் செய்யப்படல் வேண்டும்.

### மாவீரர் நினைவுக் கூட்டம்

27-ம் திகதி மாலை 4 மணிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவீரர் நினைவாக மா பெரும் பொதுக்கூட்டம் இடம்பெறும். இதில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களும் மக்கள் முன்னணித் தலைவர்களும் உரையாற்றுவர். இரவு ஏழு மணிக்கு தேசியக் கொடி இறக்கம் இடம்பெறும். (கி)

### 3-ம் கட்ட நிவாரணம்

## அனாவசிய நிபந்தனையை உடன் நீக்கக் கோரிக்கை

இடம்பெயர்ந்து அகதிகளாகத் தகுந்த உறையுள் இன்றி, ஒருவேளை கஞ்சிக்கே வசதியின்றிப் பராரிகளாக அலையும் மக்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் ஊடான நிவாரணப் பொருட்கள் ஒழுங்காகக் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கிலிருக்கிறார்கள் எனக் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது

பாதுகாப்புப் படையினரின் கொடூரத் தாக்குதல்களின் விளைவாக யாழ். குடாநாடு உட்பட ஏனைய தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தத்தம் இல்லங்களை உடைமைகளையெல்லாம் கைவிட்டு உடுத்த உடையுடன் வெவ்வேறு கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு 1-ம், 2-ம் கட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால் 3-ம் கட்டப் பொருட்கள் பெறுவதில் புதிய கெடுபிடி கைக்கொள்ளப்படுகிறது.

பங்கீட்டு அட்டை சமர்ப்பித்தால் மாத்திரமே இந்த நிவாரணப் பொருட்களைப் பெறமுடியும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

எதுவுமே வேண்டாம் என்று உயிரை மாத்திரம் கையில் பிடித்துக்கொண்டு அடைக்கலம் நாடி வந்தவர்கள் அந்த அபாயக்கட்டத்தில் பங்கீட்டு அட்டையையா ஞாபகம் வைத்திருப்பார்கள்? அவர்களிடம் இப்படிக் கெடுபிடி காண்பிப்பது அநீதி. உடனடியாக அவர்களுக்கு இந்நிபந்தனையைத் தளர்த்தி உரிய பொருட்கள் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது.

பொருட்கள் வழங்கலுக்கான இறுதித்திகதி 22-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவேஇக்கால எல்லையை நீடிக்க வேண்டும் எனவும் கோரப்படுகின்றது. (ஸ்ரீ)

## முறைசாரா தொழில்நுட்ப மாணவருக்கு

முறைசாராக் கல்விப் பிரிவில், மோட்டார் றீ வைண்டிங், மின்னுபகரணம் திருத்துதல் ஆகியவற்றை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (70, 74-கி)

## முன்னாள் பேராயரின் 90-வது பிறந்த தினம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறை மாவட்ட முன்னாள் பேராயரும் இருபதுக்கு மேற்பட்ட நூல்களின் நூலாசிரியருமான அதி வண. எஸ். புலேந்திரனின் 90-வது பிறந்த தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வட்டுக்கோட்டை பேராலயத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி வண டி. ஜே. அம்பலவாணரினால் நன்றி தெரிவிக்கும் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடாத்தப்பெற்ற கூட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன், யாழ்ப்பாணக்கல்லூரியின் அமெரிக்கன் மிஷனரியான கலாநிதி றோபேட் போட்டர், ஆயர் டி. ஜே. அம்பலவாணர் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (12-கி)

## காலநடை உணவு உள்ளூரில் தயாரிப்பு

யாழ் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கால்நடைகளுக்கான உணவுப்பொருட்களை தற்போது தயாரித்து வருகின்றது.

முன்னர் கால்நடைகளுக்கான உணவுப்பொருட்கள் இச்சங்க அங்கத்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மாடுகளை வைத்திருப்போர் கால்நடைகளை வளர்ப்பவர்கள் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களுக்கும் உணவுக்கலவை வழங்கப்படும். இவ்விஷேட கலவை ஒரு மூடை 200ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள இக்கூட்டுறவுச் சங்கம் கறவை மாடுகள் வைத்திருப்பவர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்துபலகிளை நிலையங்களூடாக விற்பனை செய்து வருவதும்தெரிந்ததே. (66 கி)

## கிளி. தபால்களை ரயிலில் தருவிக்க புதிய முயற்சி

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய தபாற்பொதிகளைக் கொழும்பிலிருந்து வவுனியா வரும் புகையிரத மூலம் கொண்டுவருவதற்கான முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் க. மாணிக்கவாசகர் ஈடுபட்டுள்ளார் (33கி)

## சிறுவர் பூங்கா

வேலணையில் சிறுவர் பூங்கா வொன்று அமைக்கப்படவுள்ளது இதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தீவக மக்கள் முன்னணியினர் ஈடுபட்டுள்ளனர்.

வேலணையில் வங்களாவடிச் சந்தியில் அமையவிருக்கும் இச்சிறுவர் பூங்கா திறககப்பட்டதும் தீவுப் பகுதியில் சிறுவர் பூங்கா ஒன்றில்லாக் குறை தீரும். (24-கி)

## தென்னை நாற்று விநியோகம்

தென்னைப் பயிர்ச் செய்கையினைத் தமிழீழப் பிரதேசம் எங்கும் சீரானமுறையில் மேற்கொள்ளத் தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விநியோகிக்கவெனத் தரமான தென்னை நாற்றுக்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

வளவுகளிலும், பெருந்தோட்டங்களிலும் தென்னைகளைப் பயிரிட ஆர்வம் உள்ள அனைவரும் தங்கள் கிராமத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள், பிரதேச இணைப்பாளர்கள் மூலமாக நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என ஆய்வுநிறுவனம் அறிவித்துள்ளது.

மூன்றுவருடங்களில் பயன் தரவல்ல இனம் ரூபா 15/- ஆகவும் ஐந்து வருடங்களில் பயன்தரக்கூடியது ரூபா12/- ஆகவும் விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்களைக் கிராமிய உற்பத்திக்குழு. பிரதேச இணைப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## விதை தானியம் விநியோகம்

வீட்டுத் தோட்டங்கள், பெருந்தோட்டம் போன்றவற்றில் ஈடுபடும் அனைவருக்கும் நியாயமான விலையில் விதைகள் விநியோகிக்கப்படும் என ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

சோளம், கௌப்பி, வெண்டி, பயிற்றை பயறு, உழுந்து விதைகளை கிராமிய உற்பத்திக் குழுக்கள், பிரதேச இணைப்பாளர்கள், மாணவர் அமைப்பு தொண்டர்கள் மூலமாக பெற்றுக் கொள்ளமுடியும். (கி)

## சாவகச்சேரியில் மரக்கறி விலை அதிகரிப்பு

கடந்த சில தினங்களாக சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கத்தரிக்காய் கிலோ 24 ரூபாவாகவும், உருளைக் கிழங்கு கிலோ 40 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 30 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 50 ரூபாவாகவும் தற்பொழுது விற்கப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ப,32கி)

## உற்பத்திக்குழு உறுப்பினர் விசேட கருத்தரங்கு

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமிய உற்பத்திக்குழுக்களின் உறுப்பினர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி 'வள்ளியம்மை' மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளது.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களையும் இவ்விசேட கருத்தரங்கிற்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (12கி)

## தென்மராட்சியை நோக்கி அகதிகள்

கடந்த சில தினங்களாகக் கட்டுவன், குரும்பசிட்டி, ஏழாலை, மல்லாகம், ஊரெழு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். (ப.32கி)

## பட்டமளிப்பு

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1986-1987-ம் ஆண்டுகளில் இறுதியாண்டுப் பரீட்சையிற் சித்திபெற்ற மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா டிசம்பர் 22-ம் திகதி இடம்பெறவுள்ளது

தகுதியுடைய சகல மாணவர்களையும் அதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார் (கி)

## காரைநகரில் கடற்படைரோந்து

காரைநகர் கடற் பகுதியில் கடற்படைக் கப்பல்களினதும், விசைப்படகுகளினதும் ரோந்து நடவடிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை கடற்படை முகாமிற்கு பல தடவைகள் ஹெலிகொப்டர் வந்து சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ப.31கி)

## அதிர்ச்சியினால் மரணம்

காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்(55) என்பவர் குண்டு வெடிப்பு அதிர்ச்சியினால் மரணமானார்.

நெடுங்கேணியில் தொழில் புரிந்து வரும் இவர் வீடு நோக்கி வரும்போது சுன்னாகம் பகுதியில் இச்சம்பவம் நடந்தது. (ப31கி)

அரசாங்க அதிபருக்கு கொழும்பிலிருந்து தகவல்

# கிளிநொச்சி அபிவிருத்திவேலைகள் இவ்வாண்டுக்குள் முடியவேண்டும்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் யாவும் ஆண்டு முடிவுக்குள் பூர்த்தியாக்கப்படவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு கொழும்பிலிருந்து அறிவித்தல் வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் நீர்ப்பாசன வேலைகள் வீதித் திருத்த வேலைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் யாவும்பூர்த்தியாகாமல்இடை நிறுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் முடிவடையாவிட்டால் இப்பணம் திரும்பிச் சென்றுவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நாட்டு நிலைமைகளால் போக்கு வரவு மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக இந்த வேலைகளை துரிதப்படுத்த முடியாது இருப்பதாகவும் தெரியவருகிறது. (35-ரூ)

## உரும்பராயில் இறந்தோர் மூன்றாக அதிகரிப்பு

உரும்பராய்-கோப்பாய் வீதியில் கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த பொம்மர் தாக்குதலில் இறந்தோர் எண்ணிக்கை இப்போது மூன்றாக உயர்ந்துளளது.

ஸ்தலத்தில் இளம் பெண் ஒருத்தி மரணமாகியிருந்தார் என்பதும் பதினேழு பேர் காயமடைந்திருந்ததும் தெரிந்ததே. (23 ஸ்ரீ)

## ஊழியர்வேதனம் அதிகாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் அரச, திணைக்கள, கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த, முன்கூட்டியே தொடர்பு கொண்டு தமது அலுவலக ஊழியர்களுக்கான மாதாந்த வேதனக் கொடுப்பனவுக்காகப் பணம் பெற ஒழுங்குகளை மேற்கொண்டுளள சகல அதிகாரிகளையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வங்கி அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்குமாறு பிரதான முகாமையாளர் கேட்டுள்ளார், (கி)

## தமிழர்கள் வெளிநாடு போக ஏஜென்ஸிகள் அதிக கட்டணம்

இங்கிருந்து ஆயிரக்கணக்கான ரூபா செலவழித்து கொழும்பில் தஞ்சம் புகுந்த தமிழர்களிடம் வெளிநாட்டு பயண ஏஜென்ஸிகளும் சுளை சுளையாக பணத்தை அறவிடுகின்றனராம்.

முன்னர் ஒன்றரை லட்சம் ரூபா பயணக் கட்டணம் அறவிட்டவர்கள் தற்போது இரண்டரை லட்சம் ரூபாவை தருமாறு கேட்கின்றனர்.

அதிக செலவிலாவது எப்படியும் வெளிநாடு சென்றுவிடவேண்டும் என்று இவர்களும் கேட்பதைக் கொடுத்து விடுகின்றனர். (ப 30ரூ)

## மூன்று போராளிகளின் பூதவுடல் நேற்றுக் கோட்டையில் தகனம்

பலாலி இராணுவ முகாம் அருகே நடந்த மோதலில் வீரமரணமடைந்த மேஜர் அன்ரனி. இளம்புலி நஸார், பெண்புலி கர்த்தி ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டன.

இதில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் தேவர் மற்றும் சிற்றூரவை, வட்ட அவைத் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இதன் பின்னர் இவர்களின் பூதவுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாலையில் கோட்டையில் தகனம் செய்யப்பட்டன. (71 ப 25 து)

## பெண்புலிகள் வீரமரணம்

19-ம் திகதி காங்கேசன் துறை திஸ்ச விகாரை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பெண்புலி பற்றீசியா (தெய்வமொழி - முள்ளியவளை, முல்லைத்தீவு)வுக்கும், நேற்று பலாலி இராணுவ முகாமிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேற முயன்ற போது அவர்களுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த பெண்புலி ஆர்த்தி (கோமதி - ஆரையம்பதி, காத்தான்குடி) இருவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (கி)

## வானத்தாக்குதல்

நேற்றுமாலை ஏழாலை குப்பிழான் பகுதியில் பலத்த பொம்மர் தாக்குதல் இடம் பெற்றது. சேத விபரங்கள் பற்றித் தெரியவில்லை. மல்லாகம், அளவெட்டிப் பகுதியில் ஹெலியும் தாக்கியது. (48 ரூ)


முரசொலி

ஸ்பெஷல்

## "முற்றுப்பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்"

– யாழ் கோட்டையை
புலிகளின் முற்றுகையிலிருந்து விடுவிக்க
காரைநகரிலிருந்து கோட்டையை நோக்கிய
ஸ்ரீலங்கா அரசின்
படையெடுப்பும், அதன் முறியடிப்பும்.

சரித்திர ஆய்வாளன் 'அரவிந்தன்' எழுதும்
தொடர்விவரணம்.
வெகு விரைவில் முரசொலியில் ஆரம்பமாகிறது.

யாழ் குடாநாட்டு வரைபடமொன்று
இதனையொட்டி இலவச இணைப்பாகப் பிரசுரமாகிறது.

முரசொலிப் பிரதிகளைத் தப்பாமல் பெற
முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்!


## அம்பாறையில் 250 தமிழர்களே கொழும்பு செல்ல அனுமதி

அம்பாறை மாவட்டத்தில் இருந்து சுமார் 250 தமிழர்களை மட்டுமே கொழும்பு செல்வதற்கு அங்குள்ள படையினர் அனுமதியளித்துள்ளனர்

இவர்கள் பயணம் செய்யும் பாதைகளில் உள்ள மினி முகாம்களில் கடுமையான சோதனைக்குப் பின்னரே இந்த அனுமதி வழங்கப்படுகிறது.

ஒரு மினிமுகாமில் அனுமதி வழங்கப்பட்டால் மற்ற மினி முகாமில் தடுத்தும் வைக்கப் படுவார்கள் என இவ்வாறு வந்தவர் தெரிவித்தார். 66ரூ

## கட்டுவனில் நேற்றுக் காலை இராணுவம் சுட்டு மூவர் காயம்

தெல்லிப்பழையிலிருந்து தமது வீடுகளைப் பார்ப்பதற்கு கட்டுவன் பகுதிக்கு நேற்றுக்காலை சென்ற மூவர் அங்கு நின்ற இராணுவத்தினரின் துப்பாக்கிப்பிரயோகத்துக்கு இலக்கானார்கள்.

இதனால் வ. பாலசிங்கம் (34), பொ. சின்னத்துரை, சி. சௌந்தரராஜன் (32) ஆகியோர் காலில் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 4மணியளவில் கட்டுவன் பகுதியில் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர்த் தாக்குதலில் மயில்வாகனம் இராசு (33) காலில் பலத்த காயத்துடன் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ப11ரூ)

## இடிதாக்கி உரும்பராய் பிள்ளையாராலயம் சேதம்

வரலாற்று சிறப்புமிக்க உரும்பராய் கற்பகப்பிள்ளையார் ராஜகோபுரம் இடி வீழ்ந்து மேற்புறம் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் மின்னலுடன் கூடிய மழைபெய்த போதுஇச்சம்பவம்நிகழ்ந்தது.

கோபுர உச்சியில் இச்சேதம் விளைந்துள்ளது.

சமீபத்தில் தான் பெருமளவு பொருட் செலவில் இக்கோபுரம் சீரமைக்கப் பட்டிருந்தது. (23 ஸ்ரீ)

## ஒட்டமாவடி முகாமருகே தாக்கு ராணுவ ஜீப் சேதமானது

கடந்த வியாழன் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்டமாவடி முகாமில் இருந்து நாவலடி முகாமிற்கு ராணுவத்தினர் வாகனங்கள் சகிதம் சென்ற போது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்,

ஓட்டமாவடி முகாமில் இருந்து ஐந்நூறு யார் தூரத்தில் வைத்து புலிகள் நடாத்திய இத்தாக்குதலில் ராணுவ ஜீப் ஒன்று சேதமடைந்தது. (து)

## தள்ளாடி இராணுவம் ஷெல் வீச்சு

கடந்த புதன் இரவு தள்ளாடி முகாமில் இருந்து நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் தாழ்வுப்பாடு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் காயமடைந்தனர். (து)

## வயாவிளானில் மோதல்

வயாவிளானிலிருந்து பலாலி வீதியாகப் புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு வர முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதால் படையினர் பின்வாங்கினர். (48-ரூ)

## மினிபஸ் ஊழியர் கூட்டம்

நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள சகல தனியார் மினிபஸ் சங்கத் தலைவர், செயலாளர், ஊழியர் அனைவரும் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள நல்லூர் சாதனா பாடசாலைக்கு சமூகம் தருமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

## பலாலியில்...

சடலங்கள் கொண்டுசெல்ல இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே சடலங்கள் உடனுக்குடனேயே எரிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. (ப-11ரூ)

## இலவச...

ஒரு சிலருக்கு அரைவாசிப் பொருட்களையே வழங்குகிறார். சில பொருட்களை அதிகவிலைக்கு விற்றுள்ளார். பற்றுச்சீட்டும் வழங்கப்படவில்லை, (33 ரூ)

## ஒருவர் பலி

நேற்று முன்தினம் மல்லாகத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் கிளி (மல்லாகம்) என்பவர் பலியானார். (48 ரூ)

## ஹெலி தாக்கி இருவர் படுகாயம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டி இலந்தையடியில் ஹெலி சுட்டதில் இருவர் படுகாயமுற்றனர்.

ஒருவர் யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியைச்சேர்ந்த எம். சித்திக் (37) படுகாயமுற்றார். மற்றவர் நாவாந்துறையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப12கி)

## வீடுகள் சேதம்

நேற்றுக் காலை 6-15 மணியளவில் கீரிமலைப் பகுதியில் வீசப்பட்ட பீப்பாக்குண்டினால் கீரிமலை கருகம்பானை வீதியிலுள்ள க. குமாரதேவன் என்பவருடைய வீடு முற்றாகச் சேதமடைந்தது.

அருகே உள்ள க. உருத்திரமூர்த்தி, துரைராஜா, கதிரமலை ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்தன. (48ரூ)

## படுகாயம்

உப்பு மேடைப் பிள்ளையார் கோயிலடியில் விளையாட்டாக புறாப் பிடிப்பதற்காக தேர்முட்டிமேல் ஏறிய அப்புத்துரை ஜீவா (15) என்பவர் தவறி வ்ழுந்து தலையில் பலத்த காயத்துடன் மானிப்பாயில் உள்ள போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப 11 ரூ)

## 24 புலிகள்

லைத்தீவு), சின்னமணி, அமுதன், மூவின் (இளவாலை), சேராட் (நாகர்கோவில்), சதீஸ் (வல்வெட்டித்துறை), பற்றீசியா (முல்லைத்தீவு), ஆர்த்தி, அன்ரனி (கல்முனை) (து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 21-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.